செ.வெ.எண்.48 நாள்: 17.11.2017

**<u>திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.</u>**

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (17.11.2017) நடைபெற்றது. விவசாயிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது: -

விவசாயிகளின் குறைகளை தீர்க்கும் வகையில், தமிழக அரசு பல திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. திருநெல்வேலி மாவட்டத்தில் இயல்பான மழை அளவு 814.80 மி.மீ. நவம்பர் மாத இயல்பான மழை அளவு 208.20 மி.மீ. நவம்பர் மாதம் 16ம் தேதி வரை 192.96 மி.மீ. மழை கிடைக்கப்பெற்றுள்ளது. நடப்பாண்டில் இயல்பான மழை அளவைவிட அதிக அளவு மழை பெய்துள்ளது. 15.6 மி.மீ. மழை அதிகம் கிடைக்கப்பெற்றுள்ளது. தற்போது அணைகளில் 48.6 சதம் நீர் இருப்பில் உள்ளது. கடந்த ஆண்டு இதே காலத்தில் 5.8 சதம் நீர் மட்டுமே இருப்பில் இருந்தது. கிணறுகளில் சராசரியாக 2 மணி நேரம் முதல் 5 மணி நேரம் வரை பாசனம் மேற்கொள்ளும் அளவிற்கு நீர் உள்ளது. வினாடிக்கு 1400 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. சாகுபடிக்காக திருநெல்வேலி மாவட்டத்தின் 7 கால்வாய்களிலும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. தற்போது 987 ஹெக்டர் சாதாரன நாற்றங்காளும், 18 ஹெக்டர் பாய் நாற்றங்காளும் அமைக்கப்பட்டுள்ளது. இதுவரை 2205 ஹெக்டர் நெல் நடவு பணிகள் முடிந்துள்ளது. தற்போது பிசான நெல் நடவு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 60,000 ஹெக்டரில் பிசான நெல் பயிர் சாகுபடிக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பாபநாசம் அணையில் தற்போது 101.50 அடியும், சேர்வலாறு 103.84 அடியும், மணிமுத்தாறு 81.60 அடியும் நீர் இருப்பில் உள்ளது. விவசாயிகளுக்கு பிசான பருவ பயிர் சாகுபடிக்கு தேவையான உரம் மற்றும் விதைகளும் தேவையான அளவு இருப்பில் உள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் மொத்தம் 495 உரிமம் பெற்ற விதை விற்பனை நிலையங்கள் உள்ளது. விற்பனை நிலையங்களில் ஆய்வாளர்களால் ஆய்வு செய்யப்பட்டு இம்மாதம் வரை 2402 விதை மாதிரிகள் எடுக்கப்பட்டு, ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இதில் 2246 மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, முடிவுகள் பெறப்பட்டுள்ளது. இவற்றுள் 29 மாதிரிகள் தரமற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் 28 விதை விற்பனை உரிமையாளர்கள் மீது துறை நடவடிக்கையும், சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது. ஆய்வின் போது, தரக்குறைவான விதைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளதை கண்டறியப்பட்டு, 47.387 மெட்ரிக் டன் விதைகள் விற்பனை செய்ய தடை விதிக்கப்பட்டது. இதன் மதிப்பு ரூ.28.37 இலட்சம்.

திருநெல்வேலி மாவட்டத்தில், அம்பாசமுத்திரம், சேரன்மகாதேவி, கடையம், முக்கூடல், வாசுதேவநல்லூர், செங்கோட்டை மற்றும் கடையநல்லூர் வட்டாரங்களில் உள்ள உரக்கடைகளில் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. விலைப்பட்டியல் குறித்த தகவல் பலகை வைக்காத கடைகளுக்கு எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. தரமான உரங்கள் விற்பனை செய்வதை உறுதிசெய்ய அவ்வப்போது வேளாண்மை உதவி இயக்குநர் மற்றும் வட்டார வேளாண்மை அலுவலர்கள் ஆய்வு மேற்கொண்டு வருகிறார்கள். கடந்த மாதம் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட 275 மனுக்களில் வேளாண்மை சார்ந்த மனுக்கள் 170 மற்றும் வேளாண்மை சாராத 105 மனுக்களுக்கும் பதில்கள் பெறப்பட்டு விவசாயிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

மேலும் அலுவலர்களிடம் விவசாயிகளிடமிருந்து பெறப்படும் மனுக்களுக்கு அலுவலர்கள் உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொண்டு பதில்களை வழங்க வேண்டும் என உத்தரவிட்டார். முன்னதாக தோட்டக்கலைத் துறை, வேளாண்மைத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை ஆகிய துறைகளின் மூலம் அமைக்கப்பட்ட காண்காட்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், திருநெல்வேலி கோட்டாட்சித்தலைவர் திருமதி.மைதிலி, வேளாண்மைத்துறை இணை இயக்குநர் திரு.செந்தில் வேல்முருகன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி.சாந்திராணி உள்பட விவசாயிகள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:** செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.